[திரு. கே.ஆர். பெரியகருப்பன்] [2011 ஜனவரி 12

அதன்பிறகு, 1982 ஆம் ஆண்டு மீண்டும் இந்து சமய மற்றும் அறநிலையத் துறையினுடைய தணிக்கைக் குழு அதை ஆய்வு செய்து 1966–ல் ஏற்பட்ட அந்தப் பொருள் இழப்பைத் தவிர வேறு எந்தவிதமான பொருள் இழப்பும் ஏற்படவில்லை; 1967–ல் ஆய்வறிக்கையின்போது என்ன மதிப்பு இருந்ததோ, அதே மதிப்பு தொடர்ந்து இருப்பதாகவும் சொல்லப்பட்டது. அதேபோல் 17 ஆண்டுகளுக்குப் பிறகு 2009 ஆம் ஆண்டும் மறுமதிப்பீடு செய்யப்பட்டது. ஆக இந்த இடைப்பட்ட காலத்தில் எந்தவிதமான முறைகேடுகளும், தவறுகளும் மற்றும் கையாடல்களும் அங்கு நடந்ததற்கு வாய்ப்புகள் இல்லை. 2 சாவிகள் ஸ்தலத்தார்களிடம் இருக்கின்றன; 2 சாவிகள் கோயில் நிர்வாகத்திடம் இருக்கின்றன. ஆகவே, எதிர்காலத்தில் அந்த 2 சாவிகளையும் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். எந்தவகையான தவறுகளும் 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு இன்றைய தேதிவரையில் நகைகள் மற்றும் ஆபரணங்கள் விஷயங்களில் நடைபெறவில்லை என்பதைப் பேரவைக்கு தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(ஆ) வேலூர், எருது விடும் திருவிழா நடத்த அனுமதி பெற்றுத் தருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. ஞானசேகரன். திரு. வேல்முருகன், no further clarification. (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், பேசுங்கள்.

முற்பகல் 11–00

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் விழா வருகிறபொழுது 'எருது விடும் திருவிழா' தொன்றுதொட்டு எல்லா கிராமங்களிலும் கொண்டாடப்படுகிற வழக்கம் இருந்துவருகிறது. இந்த ஆண்டு எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் எருது விடும் திருவிழாவிற்கு அனுமதி அளிக்க முடியாது என்று திட்டவட்டமாக கூட்டம் போட்டு இன்று அறிவித்திருக்கிறார்கள். அதனால் எங்களுடைய மாவட்ட மக்கள் மிக கொந்தளிப்போடு இருக்கிறார்கள். ஜல்லிக்கட்டு, எருது விடும் திருவிழா, மஞ்சுவிரட்டு என்பவையெல்லாம் தமிழர்களுடைய வீர விளையாட்டுகள். இது இன்று அல்ல, நேற்று அல்ல, சங்க காலத்திலிருந்து தொடர்ந்து

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 12] [திரு. சி. ஞானசேகரன்]

நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய ஒரு வழக்கம், ஒரு விழா. இந்த விழாவை இன்று கணக்கெடுப்பு செய்கிறபொழுது, ஜல்லிக்கட்டுக்கு மட்டும் 12 மாவட்டங்களை அடையாளம் கண்டு, அந்த 12 மாவட்டங்களில் மட்டுமே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: முடித்துவிடுகிறேன். 12 மாவட்டங்களில் மட்டுமே ஜல்லிக்கட்டு நடைபெற வேண்டும் என்று அரசு ஒரு சுற்றறிக்கையை அனுப்பி இருக்கிறது. அந்தப் பட்டியலிலே எங்களுடைய வேலூர் மாவட்டம் இல்லை. அந்தப் பட்டியலிலே இல்லாத காரணத்தினாலே இன்று மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் துறை கண்காணிப்பாளரும் அனுமதியை வழங்க மறுக்கிறார்கள். வேகமாக ஓடும் மனிதனுக்கே பரிசு கொடுக்கிறோம். ஆனால், மாடு வேகமாக ஓடுவதற்கு பரிசு கொடுப்பதோடு ஜல்லிக்கட்டில் மாட்டை யாரும் துன்புறுத்துகிற வழக்கம் எங்களுடைய மாவட்டப் பகுதியிலே கிடையவே கிடையாது. மனிதனுக்கே நீங்கள் பரிசு கொடுக்கிறபோது, வேகமாக ஓடும் மாட்டுக்கு பரிசு கொடுப்பதில் எந்தவிதமான தவறுமில்லை. பிராணிக்குத் துன்பம் என்ற ஒரு கேள்வியே எழவில்லை. அப்படி கேள்வி எழாதபோது—இதிலே Animal Welfare Board தலையிட்டு, மூக்கை நுழைத்து ஒவ்வொரு மாட்டுக்கும் நீங்கள் 500 ரூபாய் கட்ட வேண்டும். அந்த 500 ரூபாய் கட்டணம் கட்டுவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் மாட்டை லாரியில் ஏற்றிக்கொண்டு வந்து இரசிதை இணைக்கிறார்கள். எங்கள் பகுதியில் எல்லாம் மாட்டை இந்தப் பக்கம் 10 பேர், அந்தப் பக்கம் 10 பேர் இழுத்துக்கொண்டுதான் வருவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், என்ன வேண்டும்? அதை மாத்திரம் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா உறுப்பினர்களுடைய கோரிக்கை இது. 2 நிமிடங்கள் time கொடுத்தால் போதும் எனக்கு. இதற்கும் Animal Welfare Board–க்கும் சம்பந்தமே இல்லை. சர்க்கஸ் கம்பெனியிலே இருக்கின்ற சிங்கத்திற்கும், புலிக்கும்தான் இரசீது கொடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 ஜனவரி 12

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, whether the Board has got powers or not is to be decided by the Supreme Court. அதை நீங்கள் மறுபடியும் argue பண்ணாதீர்கள். இப்பொழுது தேவை நம் ஊரிலே மாடு ஓட வேண்டும். அதைக் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதானே? சென்னையிலிருந்து வேலூர் வரைக்கும் மாட்டை ஓட்டிக்கொண்டே போவீர்கள் போல இருக்கிறதே? (குறுக்கீடு) சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்வதைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வேலூர் மாவட்டத்தில் மட்டுமல்ல. நான் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களையும், துணை முதல்வர் அவர்களையும், இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் எங்கெங்கெல்லாம் எருது விடும் விழா, ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு எல்லாம் விடுபட்டுப்போய் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம், மீண்டும் ஓர் அறிக்கையைப் பெற்று, இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு, எருது விடும் திருவிழா போன்றவற்றை அவர்கள் சுமூகமாக நடத்துவதற்கு தாங்கள் உடனடியாக உத்தரவு வழங்க வேண்டும். அந்தந்த மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கும், Collector–க்கும் order கொடுத்து, இந்த விழா வழக்கம்போல, எந்தவிதமான இடையூறும் இல்லாமல், நிறுத்தாமல் நடைபெறுவதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? Animal Welfare Board தலையிடாமல் எங்களைக் காப்பாற்றுமா என்பதை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது விஷயமாகச் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) இந்த விஷயமா? சார், மாடு விரட்டும் விழா விஷயமாகப் பேசுகிறீர்களா, சொல்லுங்கள். திரு. பாண்டுரங்கன், என்ன சொல்லுங்கள்?

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய திருநாளான பொங்கல் திருநாளையொட்டி தமிழகம் முழுவதும் மக்கள் தங்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தைக் கொண்டாடும் விதமாக விளையாட்டுப் போட்டிகள், மாட்டு வண்டி பந்தயம், எருது விடும் திருவிழா

2011 ஜனவரி 12] [திரு. கு. பாண்டுரங்கன்]

போன்றவற்றைப் பாரம்பரியமாக பண்டைய காலந்தொட்டு நடத்தி வருகின்றார்கள். ஆனால் வேலூர் மாவட்டத்தில் எருது விடும் திருவிழாவிற்கு அனுமதி வழங்கக் கோரி பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முன்பாகத் திரண்டபோது, அனுமதி கோரி வந்தவர்களை மிரட்டும் விதமாக மாவட்டக் காவல் துறை போலீசார் மட்டுமின்றி, ஆயுதப்படை போலீசையும் குவித்து, தேவையில்லாமல் பதட்டமான ஒரு சூழ்நிலையை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: You are going to another subject. I won't admit. *(குறுக்கீடு)* அனுமதியில்லை. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. நா. பொங்கலூர் பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடத்துவது சம்மந்தமான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தற்போது நடைபெற்று வருகின்றது. சில மாவட்டங்களில் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு நடத்தும் முன்மொழிவுகள் விடுபட்டுவிட்டன. மேற்படி ஜல்லிக்கட்டு விடுபட்ட ஊர்களில், மீண்டும் ஜல்லிக்கட்டு நடத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டு, பட்டியலில் சேர்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No, no sit down. நீங்கள் ஜல்லிக்கட்டு subject–ஐ பற்றிச் சொல்லப் போகிறீர்களா? *(குறுக்கீடு)* மாடு விரட்டுவது சம்பந்தமாக யாராவது சொல்கிறீர்களா? *(குறுக்கீடுகள்)* வேறு subject–ஐ பற்றிப் பேசப்போகிறீர்களா? *(குறுக்கீடு)* வேறு subject–ஆ? *(குறுக்கீடு)* இந்த subject–தானா? *(குறுக்கீடு)* உட்காருங்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டீர்களா? *(குறுக்கீடுகள்)* முடிந்தது, இரண்டு subjects எடுத்தாகிவிட்டது.

மாண்புமிகு திரு. நா. பொங்கலூர் பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லிவிட்டேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடிந்தது. இன்றைக்கு இரண்டு matters எடுக்கப்பட்டுவிட்டன.